உ

பரமபதிதுணை.

டி-ஜி-ஜெகநாதநாயுடு, ஜி-என்-சாமிநாதமுதலியார், கானமோகன டி-எ-இராஜாமணி அம்மாள், ஜெகன்மோகன ப்ரர்ஸி துப்புசாமி முதலியார், சூரியநாரர்யண பாகவதர், வைத்திய ஐதையர், சாமாவையர், மதுரை மாநகர் - பைரவ சுந்தரம் பிள்ளை முதலியநாடகக் கம்பெனியார் பலராலும் நடத்திவருகிற

பார்ஸி நூதன
கோவிலன் சரித்திரம்
இரண்டாம் பாகம்.

இஃது

திருநெல்வேலி மகா-ா-ா-ஸ்ரீ
வித்வான் - நாராயணக் கவிராஜ ரவர்கள்
மாணக்கரி லொருவரான மகா-ா-ா-ஸ்ரீ,
கோட்டாறு வீ. உடையார் பிள்ளை
அவர்களா லியற்றப்பெற்று

ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுள்மீது
நூதனஇந்துஸ்தான் பஜனைகீர்த்தனை யியற்றிய
மதுரை-கலியாண சுந்தரம் பிள்ளையவர்கள்
பார்வையிட்டு

மதுரை [illegible] மண்டபம் புக்ஷாப்
[illegible]
கோபாலகிருஷ்ணக் கோனரால்

திருமங்கலம்
ஸ்ரீ கிருஷ்ண விலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1915 [அணா—2.

உ

பரமபதிதுணை.

டி. ஜீ. ஜெகநாதநாயுடு, கானமோகன இராஜாமணியம்மாள், பாமேஸ்வரய்யர், சாமாவையர், வைத்யநாதய்யர், சூரியநாராயணபாகவதர், பாதநளின ஜானகியம்மாள், மதுரைமாநகர் பிரபல ராஜ பார்ட் பைரவஸாமி பிள்ளை, முதலிய நாடகக் கம்பேனியார் பலராலும் நடாத்தி வருகிற

பார்ஸி நூதன

கோவிலன் சரித்திரம்.

இரண்டாம் பாகம்.

விநாயகர் துதி.

வெண்பா.

விற்பனனுங் கோவிலவ னற்சரிதை நாடகமாய்
அற்புதமாய் பாடவரு விலகும்—விற்பனமின்
றங்கத்தி னனத்தான் தாழ்ந்தன்பி னேற்றிடமா
தங்கத்தி னனைத்தான் றாள்,

வோரயேனை விடலாதுமா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

(கோ) மாமதுரைசென்று வாரேனடி
விடைகொட்டடீ மகிழ்பூணடி

(கண்) மன்னர்மன்னனவ்னே வருவேனும்மோடு
மாதுபங்கன் வாழ்ந்திடுந் தென்கூடல்நகர்க்கு

(கோ) [வருதல்] தகாது வுனக்கு
(கண்) [என்ன] புகலு மெனக்கு
(கோ) பொற்புறு மாதே
(கண்) விற்பன வாதே
(கோ) பாதங்கள் நோகும்
(கண்) நாதனரு ளாகும்
(கோ) கானக மாச்சே
(கண்) வீணன பேச்சே
(கோ) வநே வாரேனென்றாய்
(கண்) நானே செல்வேனென்றீர் (மா)

(கோவிலன் தனக்குள் ஏது இவள் நம்மைவிட்டுப்பிரியமாட்டாள்போ லிருக்கிறது ஏமாற்றித்தான் செல்லவேண்டும்) கண்மணி உன் இஷ்டம் போலவே.

தூரதூர் தூரதூர் என்ற வர்ண மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தாளம்-ஆதி.

பல்லவி.

வாடி நீ வாடி நீ வஞ்சியே மாமதுராபுரிக்கேகிட (வா)

அநுபல்லவி.

மானன மீனுள் மனோமயம் போக்கியே
வாழ் மதுராபுரி மாநகர் நோக்கியே
மாதவி கடனுக்காக ஓர்சிலப்புவிற்றிட
மானிலத்தில் சத்யமென்னும் வாழ்வு நிலை பெற்றிட
மாதே யமுது கட்டிக் கொண்டு (வா)

(கோ-வ-ம்.) ஏ கமுகை யொத்த கண்டத்தாய் உடனே கட்டுசாதம் கட்டிக்கொண்டு வா.

கண்ணகி உட்சென்று கட்டுசாதம் சமைத்துக் கட்டுகின்றாள் கோவிலன் இதுதான் சமயம் புறப்பட்டுவிடுவோமென மதுரையைநாடிச்சென்று விடுகின்றான். கட்டுசாதம கட்டிய கண்ணகி வெளியில்வந்து பார்க்கின்றாள் கணவனைக்காணோம் கற்பின் மகிமையினால் கண்டுகொள்கின்றாள் தானும் பின்தொடர்ந்து செல்லவேண்டுமென தான் அந்த இடம் செல்லும்வரை இடைவழியில் மாதவியைப்போல் கல்பதுமை யொன்று உண்டாகும்படி செய்கின்றாள்.

நேரிசை வெண்பா.

சிற்பரனே யென்கணவன் செல்லும் வழிதனிலே
அற்புதமாய்க் கண்டோ ரதிசயிக்க—கற்பதுமை
நிற்கக்கருதுகிறேன் நெஞ்சிரக்கமில்லாத
பொற்கொடியாள் மாதவியைப்போல்.

வழியில் கற்பதுமை யுண்டாகிவிடுகிறது.

14-வது வசீன்.

காவிரிப்பூம்பட்டணத்தினின்று மதுரைநகருக்குச் செல்லும் வழி கானகம்.

மாதவிபோல் நிற்கும் சிலையைக்கண்ட கோவிலன்.

(கோ-வ-ம்) கண்மணி, மாதவி யான்மீண்டும் உன்னிடம்வர மாட்டேனென்றோ எதிர்கொண்டு புறப்பட்டு விட்டாய் உன் கடனைத் தீர்த்துவிடாமல் போஜனம் அருந்தக் கூடாதென இச்சிலம்பை விற்பதற்காகப் புறப்பட்டுவிட்டேன். அதற்குள்ளாக.

இராகம்-காம்போதி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

மாதவிநீ வந்ததென்னடி
வழிமறித்து நிற்பதென்னடி உன்
பாதம்நொந்து மேனிவாட
பாதி உச்சி வேளைதன்னில் (மாத)

கடிய வெய்ய வானதினாலே
காணுதுன்மெய் கல்தனைப்போலே அடி
அன்னமே உன் கடனுக்காக
அசத்தியம்நான் செய்குவேனோ

(கோ-வ-ம்.) காதற்கனியே (எனமுத்தமிடுகின்றான் கல்லாக இருக்கின்றது.)

கட்டிமுத்தமிட்டிடக் கல்லாயிருக்குதே
கண்டவர்களென்னைப் பரிகாசஞ்செய்வரே
கட்டழகிகண்ணகியின் கற்பனைதானோ
கானகத்திவ்வாறுநேரக் காரணமேனோ

அதற்குள் வந்து ஒளிந்து பார்த்துக்கொண்டிருந்த கண்ணகி சிரித்துக்கொண்டு வருகிறாள்.

(கண்-வ-ம்) பிராணநாதா பேஷ்கல்லும்சரீரமும்தெரியவில்லையா

(கோ-வ-ம்) பெண்ணே இச்சமாச்சாரத்தை வெளியிடவேண்டாம் ஆக்கிரக்காரருக்கு புத்தி கொஞ்சமென்பது போலாயிற்று கண்மணி ஆடவர் செல்லும்வழிகளில் பெண்டீரையும் கூடவே கூட்டிச்செல்தல் தகுதியன்று என்பதாக உனக்கு எவ்வளவோ எடுத்துரைத்தும் நீபிடிவாதம் செய்தமையால் தந்திரமாக விட்டு வந்தேன் அவ்வாறிருந்தும் வந்துவிட்டாயே சரி செல்வோம்வா

இருவரும் மிக்க வருத்தத்தோடு செல்கின்றனர்.

கானகத்தில் நாமலைந்து என்ற வர்ண மெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மங்கையே என் கண்ணகியே வருவாய்டீச் சித்ததியே
பங்கயன்செய் சற்பனையோ பற்றியமுன்னை வினையோ
கற்களோடு முட்களெல்லாங் கால்களிற் றைப்பதால்வாடி
துக்கமிகக் கொள்ளாமலே தொடர்ந்தென்னுடனே ஓடி
மாநாக வணிகன்செய்த மாதவத்தாற் பாரின்மீது
வாருடன்வந் தவதரித்த பாக்யமொளி யாளிப்போது
வெய்யல் மிகஅடிக்குதே மேனியெங்குந் துடிக்குதே
தையலே மனம்வாடுதே தாகவிடாயும் நீடுதே
அன்ன நடையுடைய மின்னலிடையாளே நீ
அன்புடனே வாராய்நாடி வெயிலிவா டிடாமல்லாடி.

(கண்-வ-ம்.) பிராணகாந்தா நாம் எவ்வளவோ தூரம் நடந்தும் இன்னும் பாதிவழியாவது தீரக்காணேமே நாதா வெய்யோன் கொடுமையோ அதிகமாயிருக்கின்றது கால்கள் கொப்பளிக்கின்றன நாவோ உலர்கின்றது என்னால் நடக்கமுடியவில்லையே ஆ அப்பாடா உஸ் (என மிகுந்த களைப்புடன்.)

தரு-பஜாரிமே தில்பேலகானுசே என்ற வர்ண மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மன்னவா என்னல்லவ லாகாது-இந்த
மங்கைமீது கோபங் கொள்ளக் கூடாது (மன்)

தையல் நானென்ன செய்வேன் தாகமிக வாகுதே
தாகத்தால் கால்கைகள் தளர்வடைந்து நோகுதே
வேகமாய்த்தண் கொணர்ந்து வேதனையைத் தீர்ப்பீரே
இல்லாவிடில் வரலா காது
எடுத்தடி கூட வைக்க முடியாது (மன்)

(கோ-வ-ம்) கண்ணகியைத் தன்தோளில் அணைத்துக்கொண்டு அரும்பொற்பாவாய் ஆருயிர்வித்தே பெருங்குடி வணிகன் பெருமடமகளே மலையிடைப் பிறவாமணியே அலையிடைப் பிறவா அமிழ்தே நீ ஏன்வருந்துகின்றனை இன்னுங்கொஞ்சம் சிரமத்தைப்பாராமல் மெதுவாக நடந்துவா அதோ தெரிகின்ற ஒருபுளியந்தோப்பில் சற்று தங்கியிரு நான் ஜலங்கொண்டு வருகின்றேன் சாப்பிட்டுக் களைப்பாறி வெய்யல் தணிந்தபின் செல்லுவோம் கண்மணி.

கோவிலன் தண்ணீர் கொண்டுவரச் செல்கின்றான் கண்ணகி தனிமையாய் வீற்றிருக்கின்றாள் அவ்வழி மார்க்கமாகக் கொள்ளையடிக்கும் திருடர்கள் வருகின்றனர்.

திருடர்கள் பிரவேசம்.

சந்தனத்தேவன் தெம்மாங்கு வர்ண மெட்டு.

கண்ணிகள்.

களவாங்கப்போவோம் வாடா காடுவெட்டிக்கருப்பத்தேவா
அளவாக்கோட்டைக்கருப்பை யடிபணிந்தே நீ வர்வா
விருமாண்டியழகத்தேவன் வெள்ளைப்பயல்ஒய்யானும்
வருவாண்டா கூப்பிடுநீ வலதாடியெடுத்துவாரேன்
விக்கிரமங்கலத்து வேம்பாயிமகன்வருவான்
அக்கரையாய்வீரணனை அன்புடனே கூப்பிடுவோம்
வந்தோம் வடமதுரை வையம்பட்டிபூங்குடியில்
இந்தநாட்டிற்களவு எங்குங்கிடைக்குமடா
ஒச்சாத்தேவாஓடியா ஒருத்தியிந்தாநிற்குறாடா
வச்சிருந்தபணம்போலே வந்துதடாகோடிரூபாய்
கிட்டநெருங்குங்கடா கிண்ணம்போல்பரியுங்கடா
தட்டுவைக்காதீர்நகை தானேகழட்டிவைப்பாள்

(திருடர்-வ-ம்.) அடே அண்ணே அந்தாலே யாரோபொம்புளே அயிதுக்குட்டிருக்ராளே என்னண்டு கேட்டுவிட்டுப் போவோம்டா. [மற்றொருவன்] கேள்ரா கேளு.

(திரு-வ-ம்.) எ குட்டி இந்தா உன்னைத்தானே நீயாரு.

(கண்-வ-ம்.) ஐயா நான் பெண்பிள்ளை.

(திரு-வ-ம்) அட இந்தப்பொர்பிள்ளை தான் என்ன அழகாயிருக்காங்க்றேன் அதுக்குச்சரியா அவபேசறதெத்தாம்பாறேன் நமக்குந்தாம் பெஞ்சாதி யிருக்கா அடத்து [கண்ணகி யிடத்தில்] என்புள்ளே நீயாரு இங்கே எங்க்றேன் வந்தே.

(கண்-வ-ம்.) ஐயா நான் காவிரிப்பூர்பட்டினம் என் நாயகரோடு மதுரைமாநகருக்குச் செல்ல வந்தோம் எனக்குத் தாகவிடாய் அதிகரித்ததால் தண்ணீர்கொண்டுவரச் சென்றிருக்கின்றார் வேறு விசேடமில்லை.

(திரு-வ-ம்.) அடே பயமவ பேசறதைத்தான் பாறேன் நானுந்தாம் பொம்புளையை பார்த்திருக்கேன் என்னுமினுக்குமினுக்குறுடா துட்டுக்குரெண்டு காசுக்கு மூனுன்னுல்ல மினுக்குறு எம் புள்ளே இந்த நகையெல்லாம் என்னத்துக்குப் போட்டிருக்கே எனக்குக் கழட்டிக் கொடுத்துட்டு எங்கூட வந்திடிரியா.

(கண்-வ-ம்.) தனக்குள் ஏது இவர்களைப் பார்த்தால் திருடர்களைப்போலிருக்கிறது இனி இவர்களிடம் மரியாதையாய்ப் பேசலாகாது.

போதும் போதும் நில்லு நில்லு என்ற வர்ண மெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

போடா போடா புத்திகெட்ட
போக்கிரி காளப்பா ஓடிடு (போடா)

திருடன்.

எட்டிப்போடாவென்றுரைத்த குட்டியேவுன்மேலணிந்த
அட்டியலோடெல்லாங்கையில் அட்டியின்றித்தந்தால்போவோம்

(கண்) துட்டர்களே நீங்களென்னைத் தொந்தரவுசெய்தாலெமன் கட்டியுங்களை வதைப்பான் திட்டமா யறிவீரோடி.

(திரு) கட்டினாலுங் கட்டழகி
விட்டுவிட்டுப் போகமாட்டோம்

(கண்) போகாமற்பின் னென்னசெய்வீர்

(திரு) பூவையேசெய் குறேம் பாரு

(கண்) புரட்டுத் தனமேன் மாது

(திரு) திருட்டுப்பயல் குணத்தை
திரட்டிக் காட்டு றேமாதே (போடா)

(திரு-வ-ம்.) ஏம் புள்ளே என்ன ஓசர முருக்கா முருக்குறே நகையெல்லாம் கயட்டிக்கொடுக்கிரியா ஒன்னே குத்திக் கொல்லட்டுமா.

(கண்-வ-ம்.) தனக்குள் இதேது நம்மை ஆபத்துக்கு உட்படுத்துவார்கள் போலிருக்கிறதே அடேபாவிகாள் இதோ உங்கள் இஷ்டம்போல் நகைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள் (என ஆபரணங்களைக் கழற்றிக் கொடுக்கின்றாள்)

(திருடர்களில் ஒருவன்-வ-ம்.) மரத்தின் மீதிருந்துகொண்டு அடே யன்னே கழுத்தில் ஏன்னமோ முணுக்கு முணுக்குன்னு தெரியுது அதையும் பரீடா (கீழிருக்கும் திருடர்கள்) கயட்டம்மா கயட்டு (என்கின்றனர்.) கண்ணகி வயிற்றெரிச்சலோடு சாபம் கொடுத்தல்.

வெண்பா.

மாங்கலியம் கேட்டவனே வெளவாலா யம்மரத்தில்
தொங்கிடுவா யிப்பொழுதே துட்டகுணந்—தங்கியமற்
றெல்லாத் திருடர்களு மென்னுடைய சாபத்தாற்
கல்லாகிப் போய்விடுவீர் காண்.

மரத்திலிருந்த திருடன் வெளவாலாகவும் கீழேயிருந்த திருடர்கள் குத்துக்கல்லாகவும் ஆகியிருக்கின்றனர்.

தண்ணீர் கொண்டுவந்த கோவிலன் வசனம்.

அறிவிற் சிறந்த ஆரணங்கே இதோ ஜலங்கொண்டுவந்திருக்கின்றேன் தாகவிடாயைத் தீர்த்துக்கொள் பெண்ணே யான் ஜலங்கொண்டுவரச் செல்லுங்கால் யாதொரு விசேடமு மில்லாதிருந்த இவ்விடத்தில் இப்போதுஏதோசிற்சிலகற்சிலைகள் நூதனமாகக் காணப்படுகின்றதே என்ன காரணம்.

(கண்ணகி கடந்த வரலாற்றைத் தெரிவிக்கின்றாள்.)

(கோ-வ-ம்) கண்மணி அவர்களோ வயிற்றுத்திரத்தின்பொருட்டு திருட வந்தவர்கள் அவர்களுக்கு இப்பேர்க்கொற்ற கொடுஞ் சாபங்கொடுத்தல் கூடாதவிஷயம் அச்சாபத்தை நிவர்த்தி செய்து நற்புத்தி புகட்டி யனுப்புவாய் பெண்ணே.

(கண்ணகி நாயகன் சொற்படி சாபத்தை நீக்குகின்றனள்.)

(திருடர்-வ-ம்) தாயே பரமேஸ்வரி காத்திடம்மா காத்திடனும் தெரியாமேச் செஞ்சபொலேயெல்லாம் நீதான்பொருக்கனும் இந்தாமமா நகையெல்லாம் கொடுத்துவிழ்ந்து நமஸ்கரிக்கின்றனர்

(கள்வர்கட்கு புத்தி புகட்டியனுப்பிவிட்டு இருவரும்மதுரை நோக்கிச் செல்கின்றனர்.)

15 - வது வசீன்.

ம து ரை மா ந க ர்.

கோ-வ-ம்.) ஏ என் காதர்க் கிளத்தி கர்னகா மதுரைமா நகரின் அற்புதக் காட்சிகளைக் கண்ணுற்றனையா மாடமாளிகைகளின் சிருங்காரங்களும் ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேசுவரர் கோவிலின் அழகும் பிரமாவின் நான்கு சிரசுகளைப்போலவும் காண்போர் கண்ணுக் கெட்டாது ஆகாயம்வரை யளாவிநிற்கும் நான்கு கோபுரவாயல்களின் சிறப்பும் ஆலயத்திற்குள் தெரிசனைக்காகச் செல்லும் ஆடவர் பெண்டீர் வனப்பும் வர்த்தகம்செய்யும் வணிகர்பேசும் அன்பும் என்ன இன்பமாக இருக்கின்றது பார்த்தாயா பார்ப்பவர் மனதைக் கொஞ்சமாவது அகலவிடாது பற்றியிழுக்குந் தன்மை நிறைந்திருக்கின்றது கண்மணி நம் காவிரிப்பூம்பட்டினம் எந்த விதத்திலாவது இதற்கு ஈடாகுமா பெண்ணே நாம்வந்து ரெம்ப நேரமாகிவிட்டது யானே சிலம்பைக் கொண்டுபோய் விற்க வேண்டும் உன்னையும் கூடவே கூட்டிச்செல்வது உசிதமாகயிராது நீயோ அச்சம் மடம் நாணம பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களையே காவலா கவுடையவளாயினும் சரியான மனிதருதவி யின்றி வைத்துச் செல்ல எனக்கும் மனம் வரவில்லை ஆதலால் இதோ சமீபத்துள்ள.

மந்தரநிகர் குந்தளமின்னே என்ற வர்ண மெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

வேதமோதும் வேதியர்வாழும்
விதியைப்பாரு யேதேனுமொரு
வேதியர்தம் வீட்டில் நான்வரும் வரை
யிற்றிருந்திடு மாதேசென்றதி
வேகம்வந்திடு வேன்கலங்கிட
வேண்டாமந்த ஆண்டவன்றனை
புரிவான்மானே மகிழ்வாய்த்தானே
விடைகொடுத் தனுப்புவாயெனை (வேத)

(கண்-வ-ம்.) நாதா தங்களுத்திரவுபோல் நடப்பதிற் தடையில்லை ஆயினும் பிராமணர்கள் சூத்திரர்களை ரெம்பக்கேவலமாய் நினைப்பவர்கள்கொஞ்சமாவது நெஞ்சிறக்கமில்லாதவர்கள் தகாத வேலைகளைச் சாற்றுவார்கள் தவறினால் பெருங்கோபத்துக்காளாகுவார்கள் ஆதலால் அவர்களுடைய அகத்தில் வசிக்க என்மனமானது சற்றுவாதனையடைகின்றது.

(கோ-வ-ம்.) கண்மணி உன் அபிப்பிராயம்போலவேபக்கத் தெருவிலுள்ள.

பூமிமெச்சிடு மன்னுமலைக்கோர்துணை என்ற வர்ண மெட்டு.

கண்ணிகள்.

க்ஷத்ரியர் வீட்டிலிருக்க மனது நீ
தேறடி பதில்கூறடி அல்லல்தீரடி அவர்
சற்றேனுங் காருண்யம் தப்பாதுனை ரெக்ஷிப்பாரடி

(கண்-வ-ம்.) பிராணேசா க்ஷத்ரியர் உத்தமநற்குணமுடையவர்களாயினும் அவர்கள்வீடும் என்மனதுக்கொவ்வவில்லை.

(கோ-வ-ம்.) கண்மணி அதோ பார்.

உடுமலையின் முத்துச்சாமி பாட்டை என்ற வர்ண மெட்டு.

கண்ணிகள்.

தேசமெங்கும் கீர்த்தியாய்வியாபாரம் என்று
செய்யும் வைசியர்கள்பரதாரம் தனை
சிந்தையில் தங்கையாய் நினைத்தன்புடன்
செய்வார்களுபகாரம் இந்தநேரம் (தேச)

(கண்-வ-ம்.) பிராணநாதா வைசியர்களோ நம் இனத்தவா களாதலால் அவர்களிடத்தில் கேவலமாகச் செல்ல என் மனம் இடங்கொடுக்க வில்லை.

(கோ-வ-ம்.) கற்பிலுக் கருங்கலமே நம் எதிரிலுள்ள

சேந்தின் மாநகாந்தலில் மேவிய யென்ற வர்ண மெட்டு.

கண்ணிகள்.

மங்கையே தகைய தங்கிடும் யாதவர்
வாழும் தெருவிது தாண்டி. ஒரு
நாளும் சத்தியத்தைத் தாண்டி நட
வாதநற்குண மேவுவிற்பனர்
மாயனற்புத மானபொற்பதம்
வந்ததிவினை யோட்டிமருந்தெனச்
சிந்தையில்நாட்டும் நன்னேசர் மனம்
சோர்ந்தோரைக் காக்கும் விஸ்வாசர் (மங்)

(கண்-வ-ம்.) நாதா யாதவர்கள் வீட்டிலிருப்பது நன்மை என்பதற்கையமில்லை. பசித்த வேளைகளில் பால் தயிர் ஏராளமாக வாங்கிப் புசிக்கலாம்.

இருவரும் பேசிக்கொண்டிருக்கும் தருணம்
எதிரில் ஓர் இடைச்சி வருகிறாள்.

(கோ-வ-ம்.) இடைச்சியைப் பார்த்து அம்மா தாங்கள்யார் தங்கள் மாளிகை எது எங்கு சென்று வருகிறீர்கள்.

(இடைச்சி-வ-ம்.) ஐயா நானோ யாதவகுலத்துமாது தயிர் விற்பதற்காகச் சென்று வருகின்றேன் பக்கத்திலுள்ளது தான் என் வீடு.

(கோ-வம்.) அம்மா நாங்கள் இச்சமயம் கெதியில்லாதவர்களாக வந்திருக்கின்றோம்.

பக்தி சாதிக்க விடாது என்ற வர்ண மெட்டு.
இராகம்-இந்துஸ்தான் தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆயர்குலத்துதித்த தாயே பெரும்
அன்புவைத்தாதரிப்பாய் நீயே

அநுபல்லவி.

நாயகியாளுந்தன் பாரம் வைத்து
ரக்ஷிப்பதுதானுப காரம்

சரணம்

இந்தவுபகாரம் செய்தாலென்சரீரம்
இருக்கும்வரை மறவேன் உருக்கமுடையதிரு (ஆய)

(கோ-வ-ம்.) அம்மா யானே சிலம்பு விற்பதற்காக நகருக்குள் செல்லவேண்டியதிருக்கிறது யான் வரும்வரை என்நாயகியாகிய இவளைத் தங்களுடைய புத்திரியைப்போல் பாதுகாத்து வைக்கவேண்டும் அம்மா தங்களை எதிரில் கண்டதேநான்செய்த பூர்வ புண்ணியமென்றே எண்ணுகிறேன் அம்மா பெரும் தயை செய்யவேண்டுகின்றேன்.

(இடைச்சி-வ-ம்) ஐயா உங்களிருவரையும் பார்க்கையில் கோவிலிலுள்ள மீனாக்ஷி சுந்தரேசுவரரைப்போல் தோற்றுகின்றது மிகுந்த மனவருத்தத்தோடு வந்திருக்கின்றீர்களே என்ன காரணம்.

(கோ-வ-ம்.) அம்மா சொல்கின்றேன் சற்று கவனத்துடன் கேட்க வேண்டும்.

நொண்டிச்சிந்து வர்ண மெட்டு.

கண்ணிகள்.

மாதவர் குலத்துதித்த நல்ல
மாட்டிடையராச்சி செய்தி கேட்டிடச் சொல்வேன்
ஆதவன் மரபிலோர்கள் கூடி
அரசு புரியுமுபர் நகரமதில்
காவிரிப்பூம் பட்டினமாம் அதில்
தனத்த வணிகர் செல்வர் குலத்துதித்த
மேவியமச்சோட்டான் செட்டியார் பெற்று
மேவளர்த்தமைந்தனென்பேர் கோவலனென்பார்
மாதிவள் கண்ணகி யென்பார் சிறுவயதில்
மாங்கனியைக் கொடுத்துமாலையுமிட்டேன்
மாதவியெனும்பேர் கொண்ட தாசியை
வைப்புவைத்துக்கொண்டிருந்தென் சொத்துமிழந்தேன்
மேலுமவளுக்கு நான்கடன் ஆகி

(மந்-வ-ம்.) மஹாராஜ் வேதியர் யாவரும் சதாவேதபாராயண ஆலயபூஜை முதலியன சரிவர நடத்திவருகின்றனர்.

(பா-வ-ம்.) மந்திரிவரியா சந்தோஷம்.

ஆடா ஆடா என்ற வர்ண மெட்டு.

இராகம்-கமாசு--தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அத்திர வித்தைதரி னற்றிற க்ஷத்ரியர்
யுத்த ரங்கத்து முன் சென்று
சத்தரு க்களை வதைத்து ஜெயக்கொடி
தன்னைக் கட்டி னரா வென்று (அத்)

(மந்திரி-வ-ம்.) மகாராஜ் குறைவரச் செய்து வருகின்றனர்.

(பாண்-வ-ம்.) மந்திரீ.

அலரியில் யாரேனும் அந்நீதம் என்ற வர்ண மெட்டு.

இராகம்-கானடா-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

வர்த்தகம் செய்யும் வைசியர் யாவரும்
வாய்மைதவறிடாமல் வாழ்கிறரா சொலும்

(மந்-வ-ம்) அரசே தவராது நடந்து வருகின்றார்கள்.

பாண்டியன் (அஞ்சாதே அஞ்சாதே) என்ற வர்ண மெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஏமம்.

கண்ணிகள்.

சென்னல்விளைந்து செழித்திடப்பாரில்
பின்னருமழவே பெய்யுதோமும்மாரி

(மந்-வ-ம்.) மஹாராஜ் மாதமும்மாரி குறைவறப்பொழிந்து நாடு செழிப்புற்றிருக்கின்றது.

(பா-வ-ம்.) மந்திரி வஞ்சிப்பத்தன் பொற்கொல்லன் [illegible] கொண்டு வந்து கொடுக்கவில்லை யாதோ [illegible]

கொண்டு வந்து கொடாவிடில சிரச்சேதம் செய்வதாக ஆக்ஞாபித்து யின்றேடு எழுதினங்களாயின யின்னும் வராத காரணம் என்ன.

வஞ்சிப்பத்தன் கோவலனை யழைத்துக்கொண்டு
உள்ளே வருகின்றான்.

(வஞ்-ப-வ-ம்.) மகாராஜ் நமஸ்காரம்.

(பாண்-வ-ம்) ஆசாரி சிலம்பை எங்கே.

(வஞ்-ப-வ-ம்.) மகாராஜ் ஏதோ தெய்வாநுக்ரகத்தால்தேடினமூலிகை காலிற் றைத்தது போல இதோ நிற்கும் கொஞ்சமும் நெஞ்சமஞ்சாத் திருடன் மனத்திடத்துடன் திருடின விடத்திலேயே சாமர்த்தியமாக விற்பதற்குவருவதைக்கண்டு ஆசாமியை விடாது இங்கேயே கொண்டுவந்து விட்டேன்.

(பாண்-வ-ம்.) அடா நீயாவன் இச்சிலம்பு உனக் கெவ்விதம் கிடைத்தது உன் நகர் யாது உன்பெயர்யாது உண்மையை ஒழியாமல் சொல்லவேண்டும்.

(கோ-வ-ம்.) ஐயா யான் காவிரிப்பூம் பட்டினம் என்பெயர் கோவிலன் எனக்குற்ற வறுமையை நீக்கும் பொருட்டு என் பத்தினியின் காற்சிலம்பை விற்கத் துணிந்து இதனை வாங்கும் தகுதி வாய்ந்த சீமான்கள் இம்மதுரைமா நகரில்தான் இருக்கின்றார்கள் என்று இங்குவந்து விலைகூறிவரும் தருணம் இந்த ஆசாரியார் ராஜ சமுகத்தில் வேலை செய்வதாகவும் விற்றுத் தருகிறேனெனவும் அழைத்து வந்தனர். வேறொன்று மறியேன்.

(பாண்-வ-ம்.) வஞ்சிப் பத்தரே இருவர் வாக்கு மூலமும் பேதமாக யிருக்கின்றதே யென்ன சொல்லுகின்றீர்.

(வஞ்-வ-ம்.) மகாராஜ் திருடன் பின் எவ்வாறுரைப்பான் திருடினே னென்பானோ ஆனால் இவன்கையை நெய்க்கொப்பறையிலிட்டு எடுக்கச் சொன்னால் தெரியும்.

(பாண்-வ-ம்) மந்திரி நெய்க்கொப்பறையைக் காயவைத்து பரீக்ஷைசெய்து பாருங்கள் [என ஆக்ஞாபித்தவுடன் பரீக்ஷிக்கின்றனர்.]

(கோ-வ-ம்.) ஏ ஜெகதீசா இதுவுமுன் சோதனையாகண்ம[illegible] கண்ணகி நமொன்று நினைக்கத்தெய்வமொன்று நினைத்தது போலும் உன் கற்பு நிலையே என்னைக் காப்பாற்ற வேண்டும்.

பத்தினி கண்ணகியே என்ற வர்ண மெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு.

கண்மணியானவளே உயர் கண்ணகிப்பெண்ணரசே யிக்
காலத்திலேயெனைக்கள்ளனென்கின்றார்கள் காப்பாற்றவேணுமடி.

சிலம்பை நெய்க் கொப்பரையினின்று எடுத்துக்கொடுக்
கின்றான் குளிர்ச்சியா யிருக்கின்றது.

(வஞ்-ப-வ-ம்.) மஹாராஜ் இவன் அக்கினிக்கட்டு மந்திரம் கற்றிருந்தாலும் கற்றிருப்பான் பாம்புக் கூட்டிலிட்டு எடுக்கச் சொல்லுங்கள் தெரிந்துவிடும்.

கோவிலன் தரு.

பாம்புக்கூட்டில் கையைவிட்டு எடுக்குஞ் சமயம்.

பத்தினி கண்ணகியே மிகு பாங்கான பெண்மயிலே இப்போ
பாண்டியன் முன்னே பரதவிக்கின்றேன் கண் பார்த்திடவேணுமடி

சிலம்பை பாம்புக் கூட்டினின் றெடுக்கின்றான்
பாம்புகள் ஒன்றும் செய்யவில்லை

(வஞ்-ப-வ-ம்.) மஹாராஜ் கெருடக்கொடி கையில்வைத்தாலும் வைத்திருப்பான் புலிக்கூட்டில் போட்டெடுக்கச் சொல்லுங்கள்.

கோவிலன் தரு.

புலிக்கூட்டில்.

வஞ்சமில்லாதவளே மாணக்கன் செட்டிமகளே இப்போ
வஞ்சிப்பத்தனென்னை வஞ்சகனென்கின்றான்வந்தாளவேணுமடி

புலிக்கூட்டில் கையை விட்டு எடுக்கின்றான்
புலிகள் ஒன்றும் செய்யவில்லை.

(பாண்டியன்-வ-ம்.) அமைச்சர்காள் இதற்கென்னதெரிவிக்கின்றீர்கள்.

(துன்மந்திரி-வ-ம்.) அரசே திருடர்கள் திருடினேனென்று சொல்லமாட்டார்கள் அதிலும் தகுந்த சாமார்த்தியம் கற்றிருப்பார்கள் கையுங் களவுமாகப் பிடித்திருக்கும்போது சந்தேகமேன் தகுந்த தண்டனை விதிப்பதே சரி.

(நன்மந்திரி-வ-ம்.) ராஜேந்திராநன்றாய்க் கவனிக்கவேண்டும் [அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்] என்பதற்கிணங்க இவனை கவனிக்குமிடத்து இவன் திருட

னுகத்தோற்றவில்லை. [எண்ணித் துணிக கருமம் துணிந்த பின்னெண்ணுவமென்பதிழுக்கு] என்பதுபோல நன்றாய்ஆலோசித்துச் செய்யவேண்டும் இல்லையேல் கீரியைக் கொன்ற பிராமண ஸ்திரீயின் கதைபோலாக முடியுமாதலால் திடீரென்று தண்டிப்பது தகுதியன்று வஞ்சிப்பத்தன் வார்த்தையைமட்டும் நம்பிவிடக்கூடாது.

(துன்மந்திரி-வ-ம்.) மஹாராஜ் யான் உரைப்பவைகட்கெல்லாம் நேர்விரோதமாகவே சொல்லத் தயாராக யிருக்கிறார் இவர் சொல்வதை கவனிக்கவேண்டாம் சரியான ருசு விருக்கிறது.

பாண்டியன் கோவிலனைக் கொலைசெய்து விடும்படி தீர்மானித்து விடுகிறான்.

கொலைஞர்கள் கொலைக் களத்துக்குக் கொண்டு செல்கின்றனர்.

கோவிலன் தனக்குநேர்ந்த கெதியை நினைந்து வருத்தமுறல்

ஆசிரிய விருத்தம்.

பொன்வளர் காவிரிப்பட்டண மாச்சோடன்
புத்ரனாய் வந்துதித்துப்
பூவைகண்ணகி தனைத்திருமணங் கொண்டவோர்
புதுமையை நினைந்தழுவனோ
மின்னிகருமிடையள் மாதவிசதிரில் மாலையென்
மீதெறிந்தற் கழுவனோ
மெல்லியுடனேசென்று பலிரெண்டுவருடமாய்
மேன்மைபெற் றதற்கழுவனோ
தன்னிகரில் கண்ணகை விகிதம்யான் கண்டங்கு
சாருவேனென வுரைக்கத்
தாசிமாதவியுனை விடுவனோவெனவவள்
தனக்கோரு கனகபாவை
என்னிகர்செய்துதந் தேகும்வழி நடுவினி
லெனைமோச மாயழைத்து
எனக்குநீபதினாயிரம் பொன்கொடுத்தகல்லை
யெனவாய்மை தந்துவந்தேன்

அன்னதைத்தீர்க்கவும் மதுரைவழிவந்தவோ
ரவதியை நினைந்தழுவனே
அருமைசேர் கண்ணகி தனைத் தனியிருத்தியே
அவளின்று காற்சிலம்பை
இன்னகரில்விலைகூற வணிகன் வஞ்சிப்பதத்
னிடர்செய்த தற்கழுவனே
எனையரசன்முனம் விடுத்தவன் புலிக்கூட்டடைத்
திருகையும் புத்திமிட்டு
பின்னமாய்ச்சுடுநெயின் கொப்பரையிலிடுவெனும்
பெரியபிம்சைக்கழுவனே
பேரறிவிலாதவிப் பாண்டியன் தண்டனைப்
பெரும்பழிக் கேயழுவனே
வுன்னகரில்வந்திந்த அவதியான்பட்டிட
உன்மனந் துகந்ததம்மா
உம்பர்புகழும்பிகையே நின்பதமலாதிங்கு
ஒருவர்துணை யிலையம்மணி.

18-வது ஸீன்.

இடைச்சியின் வீடு.

(இடைச்சி மகள்-வ-ம்.) கண்ணாயி ஏன் ஒருவாறான வாட்டத்தோடிருக்கின்றாய்.

(கண்-வ-ம்.) அம்மா ஒன்றும் இல்லை சிலம்பு விற்கச்சென்ற என்காதர் இன்னும் வரவில்லையே அதைப்பற்றி நினைத்துப்படுத்துக்கொண்டேயிருந்தேன் ஏதேதோ காணக்கூடாத கனவுகளெல்லாங் கண்டேன் அதனால் என்மனமானது ஒருவாறான கலக்கத்தை யடைகின்றது அம்மா.

தாயையும் விட்டுத் தனித்திருந்தாய் என்ற வர்ண மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

(கண்) காதலனும்வரக் காரணம்
ஏதென்றறிகுவேன் அம்மா அம்மா

(இடை) நீதனுகாமனுன் றுதன்விற்றுவந்து
சேருவார் க்லேசமேன் சும்மா

(கண்) அங்கம் நடுங்குவதால் மன்னனுக்கென்ன
சங்கடம் நேர்ந்ததோ அம்மா அம்மா

(இடை) மங்கையே சற்றுங் கலங்கவேண்டா மன்னன்
மங்களமாய் வரு வாரம்மா

(கண்) என்னசொன்னாலுமென் னுள்ளம்பதைக்குதே
என்னசெய்வேன் சொல்வாய் அம்மா அம்மா

(இடை) அன்னவர்வைத்த அடையாளமேதேனும்
பின்னமுண்டோ பார்ப்பாய் அம்மா

கண்ணகி அடையாளங்களைப் பார்க்கின்றாள் மாறியிருக்கின்றது
திடீரென்று வயற்றில் இடிவிழுந்தாற்போல் ஏங்கி
அடியற்ற மரம்போல் பூமியில் விழுகின்றாள்
ஒருமயிருதிர்ந்தாலும் கமரிமான் வாழாது என்ற மெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்

ஆஹா நானென்ன செய்வேன் அய்யோ நானெவ்வாறுய்வேன்
அடையாள மாறிக் காணுதே தெய்வமே—தெ—தெ—(ஆ)

தேங்கா யுடைந்து போச்சே திருவிளக்கணைந்துபோச்சே
தெய்வமே என்னசெய்குவேன் தெய்வமே—தெ—தெ—(ஆ)

மாங்கா யழுகிப் போச்சே மல்லிகை வாடிப்போச்சே
மங்கைநானென்ன செய்குவேன் தெய்வமே—தெ—தெ—(ஆ)

(கண்-வ-ம்) அம்மா அடையாளங்களெல்லாம் மாறியிருக்கின்றதே பிராணநாதனுக்கு என்ன ஆபத்துநேர்ந்ததோ தெரியவில்லையே அம்மா என் செய்வேன் என் மனம் பதைக்கின்றதே யாராவது போய் தெரிந்துவரவேண்டுமே.

அதற்குள்—தயிர் விற்கச் சென்ற இடைச்சியின் தாயார் கோவிலன் வெட்டுண்டானென்பதாகக் கேட்டு மிக்க வருத்தமுற்று எவ்வாறுரைப்பது என்று யோசித்துக் கொண்டு வருகின்றாள் கண்ணகி கலங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்து அம்மா கலங்கவேண்டாம் இதோ உன்னாதன் வந்து விடுவார் அவருக்கு ஒன்றுமில்லை யம்மா.

(கண்-வ-ம்.) [கனக்குன் இடைச்சி யாராற்றுகிறு னென்று தெரிந்து கோபமுண்டாகி] அடி என்னிடம் பொய்யை யுரைக்கின்றாய்.

என்பேரைச்சொல்லி மருந்துரைக்கின்றனு என்ற மெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

என்னிடம் பொய்யைப் புகன்றதாலுன்வீ
டெரிந்திடப் போகுது பார்
தனித்திடச் சந்தேகம் தீர்
இனிமேலாவது உண்மையை யொழியாமல்
யாவுஞ் சரியாகக் கூர்
எந்தனை யாரெனச் சிந்தனை செய்தாய் (என்)

வீடு தீப்பற்றுவதைப் பார்த்த இடைச்சி நடுக்கமுற்று அம்மா உன்னுதன் பாண்டியனுத்திரவால் கொலை-களத்தில்-கொலைஞர்களால் வெட்டுண்டு கிடக்கின்றார். [என்பதாகக் கேட்டு]

கண்ணகி திடீரென்று கீழே விழுந்து புலம்பல்.

கண்ணிகள்.

மன்னு மடிந்தீரோ என்ன நினைந்தீரோ
மானிலத்தை வெறுத்தீரோ மன்னவா—ம—ம
ஐயோநானென்னசெய்வேன் யாரிடத்தினில்சொல்வேன்
நையுதென்மன மிகவே நாதனே—நா—நா
பாவிநானென்னசெய்வேன் பாரில்யாவாறுய்வேன்
ஆவிதுடிக்குதையையோ மன்னவா—ம—ம
அப்போநகக்கையனே செப்பொன்மேனிமெய்யனே
தம்பமெனக்காரினிமேல் மன்னவா—ம—ம

விருத்தம்.

செந்துவர் நிகர்த்தவாயுந் தெள்ளமுதனைய சொல்லும்
சந்திரபிம் பம்போன்ற சம்ப்ரம முகமுந்தீதில்
சுந்தர வடிவுவாய்ந்த சுகுணனேயினிமே லுன்
எந்தச்சென்மத்திற்கண்டென் னிருதயமகிழப்போமேன்

கண்ணகிக்கு ஆவேச முண்டாகின்றது.

ஆ! ஹா! இதோசெல்கிறேன் நீயுண்மை புரைத்ததால் உன் வீடு முன்போலாகக்கடவது. (கொலைக் களத்தை நாடிச் செல்கின்றாள்.

19-வது ஸீன். கொலைக்களம்.

வெட்டுண்டு கிடக்கும் கோவிலன் சரீரத்தைப் பொருந்தச்செய்து கண்ணகி கடவுளைத்தியானித்தல்.

இராகம் மோகனம். தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மிக்கபுகழுடைய சொக்கரேமீனாக்ஷி
இக்கணமேயெந்த னாதனுயிர்பெற்
றெழுந்திட வேண்டுகின்றேன்
எந்தனிடமனம்போ லிசைந்து அருள்புரிவீர்
இந்தவிபரங்கள் கேட்டு அறிந்தபின்
னேகுரேன் பாண்டியன்பால்

கோவிலன் உயிர்பெற்றெழுந்திருக்கின்ருன்.

இராகம்-பாரீஸ்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மாதவியோ கண்ணகியோ வந்தவளாரடி
மாதவியானல் மடிமேல்வா கண்ணகியானல்கடக்கப்போ

கண்ணகி.

தோட்டங்கொண்டாள் கண்ணகியாள் பூமுடித்தாள்மாதவியாள்
தோட்டங்கொண்டாளிங்குவந்தேன் பூமுடித்தாளேன்வருவாள்

கோவிலன்.

கூத்தியளோ கொண்டவளோ கூறினதாரடி
கூத்தியளானல்மடிமேல்வா கொண்டவளானல்விலகிப்போ

கண்ணகி.

யானைகொண்டாள் கண்ணகியாள் யேறிக்கொண்டாள்மாதவியாள்
யானைகொண்டாளிங்குவந்தேன் யேறிக்கொண்டாளேன்வருவாள்

கோவிலன்.

வைப்பினளோ மணந்தவளோ வந்தவளாரடி
வைப்பினளானல் மடிமேல்வா மணந்தவளானல்விலகிப்போ

கண்ணகி.

கழுத்துக்கொடுத்தவள் கண்ணகியாள் கட்டியணைந்தவள் மாதவியாள்
கழுத்துக்கொடுத்தவ ளிங்குவந்தேன் கட்டியணைந்தவளேன்வருவாள்

(கோ-வ-ம்.) சற்று விழித்துப் பார்த்து வெட்டுண்டிறந்து தான் உயிர் பெற்றிருப்பது கண்ணகியா லெனத் தெரிந்து

பெண்ணே. கண்ணகி ஏன்வருத்துகின்றனை எனப் பரிதாபத்தி யுடன் கேட்கின்றான்.

கண்ணகி-தரு.

இராகம்-கமாசு-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

பாதையிற்படுத்துறங்கக் காரணமென்ன
பாவைகண்ணகிவந்தே னெழுந்திருமன்னா
சுந்தராவுமக்கு நீதிக்குத் துன்பத்தையின்று செய்த
துட்டர்களைச்சொன்னால் வதமாக்குவேனென்று

(கண்-வ-ம்.) நாதா இவ்வாறாக ஏற்பட்டகாரணமென்ன.

(கோ-வ-ம்.) பெண்ணே நான்சிலம்பைவிலைகூறிக்கொண்டு வரும் தருணம் வஞ்சிப்பத்தன் என்பவன் நான்திருடனென்று சூதாகத்தெரிவித்தென்னை பாண்டியன் சமூகத்தில் கூட்டிப்போய் சிலம்போடு திருடனைப்பிடித்து வந்துவிட்டேனென்று தெரிவிக்க நன்மந்திரி யென்பவன் பெத்தலைபோ நியாயங்களைத் தெரிவித்தும் கேளாது துன்மந்திரி யென்பவனின் துர்ப்போதனையா லென்னை வெட்டி யிடும்படி உத்திரவளித்து விட்டான்.

(கண்ணகி-வ-ம்) [ஆவேசத்துடன்] ஆஹா இப்போது தங்களுக்கு என்னவரம்வேண்டும்.

கோவிலன் விருத்தம்.

பாண்டியன் வஞ்சிப்பத்தன் பழிகாரி கோவிலன் ஜ
வேண்டிய துற்குணஞ்சேர் விற்பனமில்லா மந்த் ரி
தூண்டிலின் மீனைப்போல துடித்தவர் சுற்றத்தோ டி
யாண்டிடும் படியாய்ச்செய்யும் வரமதுவேண்டுமாதே.

(கண்-வ-ம்.) [ஆவேசத்துடன்] அப்படியே தந்தேன் நீரோ செல்கிறேன் முன்போல கிடந்தக்கடவது [என்க் கோபமடைந்து துப் பாண்டியனிடம் வேகமாய்ச் செல்கின்றாள்.]

20-வது ஸீன்.

பாண்டியன் மாளிகை வாயல்.

கண்ணகி அடங்காக்கோபத்தோடு வருகின்ருள்.

சங்ருேகே சங்ககி பவுந்சியே என்ற வர்ண மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

படுபாவி பாண்டியனை விடுவேனே கொன்று
பாராது கோபமும் தீர்ப்பேனே
உடலும் நடுங்கக் குடலைப்பிடுங்கி
விடுவேன் மாலையாக யென்னுதனைக்கொன்ற (படு)
மநுநீதி தப்பிய காவலன் இந்த
மானில மீதினி லா கா து
ஆனதால் (படு)

அண்டமெல்லாம் கிடுகிடென நடுங்கும்படி சப்தித்துக்
கொண்டு உள்ளே செல்கின்ருள்.

---

21 - வது ஸீன்.

பாண்டியன் தர்பார்.

பாண்டியன்மந்திரிபிரதானிகள்சூழவீற்றிருக்கின்ருன்

கண்ணகி- தரு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

பழிக்குப்பழி கொடடா
பழிகாரப்பாண்டி யனே
பாதக மாகிய காரியஞ்செய்தவிற்
பண்ண மில் லாதவனே
என்ன நினைந் தாயடா என்
மன்னனைக் கொன் றாயடா
பின்னால் வருவதைச் சற்றுமுணராமற்
பேதகஞ் செய் தாயடா (பழி)

வசனம்.

அடே பாண்டியா என்நாதனைக் காரணமில்லாமல் அன்யாய மாய்க் கொன்றதால் உன்னைப் பழிக்குப்பழி வாங்க வந்திருக்கின் றேன், என்னசொல்கின்றாய் [வஞ்சிப்பத்தனும் துன்மந்திரியும் நடுங்குகின்றனர்.]

(பாண்-வ-ம்.) திருட்டுச் சிலம்பு கையிலிருந்தமையால் வெட்டும்படி தீர்மானம்செய்தேன்.

உடனே கண்ணகிக்கு காளிகாதேவி ரூபமுண்டாகி பூர்வக் ஞானம் தோற்றுவதோடு சிலம்புதவறிய காரணம் என்னவெனக் கவனிக்கின்றாள். வஞ்சிப்பத்தன் கொல்லைப்புரத்திலுள்ள மரத் தின்மீது கூடுகட்டியிருக்கும் கெருடன் கூட்டிலுள்ள முள்ளுகள் சிதறி கிடந்தவைகள் வஞ்சிப்பத்தன் மனைவி முத்துமாலை கொல் லைப்புரம் செல்லுகையில் முள்குத்திய உபத்திரவத்தால் வருத் தப்பட்டுக்கொண்டிருப்பதைக்கண்ட மைந்தர்கள் என்னவென் று வினவ கெருடனுக்கிடம் கொடுத்தமையாலித்துன்பம் நேர்ந்த தென்று தெரிவிக்க உடனே கூட்டைக்கலைத்து குஞ்சுகளைக் கொன்றழித்துவிட்டனர் இரைதேடச்சென்றிருந்த தாய்க் கரு டன் வந்து பார்த்து குஞ்சுகளையும் கூட்டையும் காணாது கலக்கமுற்று இவர்களுக்கு இடையூறு செய்ய எண்ணிக்கொண் டிருக்கையில் பாண்டியன் மனைவி பொற்சிலம்புகளில் ஒன்று சேதமுற்றிருந்ததைச் சீர்திருத்தம் செய்யும்படி யனுப்பியதை வஞ்சிப்பத்தன் சீர்திருத்தி வெய்யலில் உலர வைத்திருந்ததை தூக்கிக்கொண்டு சென்றுவிட்டதெனத் தெரிந்தது.

(கண்-வ-ம்) அடே பாதகா இரண்டு சிலம்புகளும் உன்னு டைய மனையாளின் பொற்சிலம்பு தானு நன்றாய் கவனி இதோ உன்னுடைய மனையாளின் சிலம்பை வருமபடியாகச் செய்கி றேன் என்று [கெருடனை நினைக்கின்றாள்.]

இராகம்-காம்போதி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

எங்கும்புகழ் செங்கருட   இச்சமயம்வாராய்
ஈனமில்லா பாண்டிய   னறிந்திடவே நேராய்
சிலம்பினைக்கண்டானுடனே   தீர்ந்திடுஞ்சந்தேகம்
[illegible]

கெருடன் சிலம்பை காலினல் தூக்கிக்கொண்டு வருகிறது.

கண்ணகி-தரு.

இராகம்—எதுகுலகாம்போதி—தாளம்—ரூபகம்.

கண்ணிகள்.

தாலியிழக்கவைத்தச் சண்டாளப் பொற்சிலம்பே இந்தத்
தையலழைத்தேனென்று கிட்டவாராதே நில்லு நில்லு (தா)
மஞ்சளழிக்கச்செய்த மாபாவிபொற்சிலம்பே இந்த
மங்கையழைத்தேனென்று கிட்டவாராதே நில்லு நில்லு (தா)
மன்னன் மடியச்செய்த வஞ்சகப்பொற்சிலம்பே
வாவென்றழைத்தேனென்று கிட்டவாராதே நில்லு நில்லு (தா)

(கண்-வ-ம்.) ஏடா பாண்டியா இதோ பார்த்தாயா உன் மனைவி சிலம்பு அந்த இரண்டு சிலம்புகளையும் கொண்டுவா என்னுடைய சிலம்புகளினுள்ளே நவரத்தின முத்துகள்கிடக்கும் உன்னுடைய சிலம்பில் இடையாதென இரண்டையும் உடைத்து காண்பித்து கருடன் கைக்குப்போன வரலாற்றையும் தெரிவித்துச் சண்டாளா கொஞ்சமாவது தீர்க்கவிசாரியாமல் செய்தையே கொடும்பாவிகாள் என்று உடனே அவர்கள் மீதிற்பாய்ந்து குடலைப் பிடுங்கி மாலையாகப்போட்டுக்கொண்டு ஆவேசத்துடன் நகருக்குள் புறப்பட்டு இம்மதுரமா நகரத்திலுள்ள வைதீக நெறி தவறாத பிராமணர் தருமவான் பசுக்கள் கற்பிற்சிறந்த உத்தம பத்தினிகள் அறிவிலும் ஒழுக்கத்திலும் நிறைந்தவர்கள் பசித்து வந்தோர்க்குதவி புரியும் ஆயர்குலத்தவர்கள் மனைவிகள் தவிர கொடும்பாவிகள் வாழும் இடமெல்லாம் தீப்பற்றி எரியக்கடவதென தன்மார்பிலொன்றைப்பிடுங்கி வீசுகின்றுள் உடனே நெருப்புபற்றி எரிகின்றது ஊரிலுள்ளோர்களெல்லோரும் ஓடிவந்து கண்ணகியின் காலில் விழுந்து அம்மா இவ்விதம் செய்யலாகாதெனத் தோத்திரம்செய்து கேட்டுக்கொள்கின்றனர்.

குபாதபஹூர் என்ற வர்ண மெட்டு.

இராகம்—இந்துஸ்தான்—கமாசு—தாளம்—சாப்பு.

பல்லவி.

கோபம்— வேண்டாமம்மணி மதி
விற்பனமுக நன்மணி (வே)

அநுபல்லவி.

பாண்டியனால்வந்த படும்பெருமோசம்
பாதககாபந்த காதையோ நாசம்
பாங்குடன் நின்னடி வேண்டி நின்றோமம்மா
பக்ஷம்வைத்தெங்களைக் காத்துரக்ஷித்தருள்வாய் நீசும்மா

கற்பில்மிகுந்த எங்கள் கண்ணகித்தாயே
கனிவுடன் நல்வரம் காதரிப்பாயே
கடுகியே தனலது பிடிக்குதென்னபாவம்
கர்மவினைஎன்செய்தோமோ வர்மமேமேறுதேவிகோபம் (வே)

கண்ணகி-வசனம்.

நான் காளிதேவி ஆதியில் நானமர்ந்திருந்த ஆலயத்திற்கு இப்பாண்டியன் தீபமேற்றுதிருக்கும்படி கட்டளையிட ஓர் வாணியன் என்னை வேண்டிக்கொண்டதால் அவனுக்கு எண்ணெய் வியாபாரத்தில்தினமும் ஏராளமாக லாபம்கிடைத்ததினால் எண்ணெய்விற்று வீட்டுக்கு வரும்போது என் ஆலயத்தில் எண்ணெய் யிட்டு தீபமேற்றிவந்து கொண்டிருந்ததை யறிந்த பாண்டியன் கட்டளைக்கு மீறியதால் என் கோவில் முன்னாலேயே வாணியனை வெட்டிவிட்டான் வாணியன் மனைவியானவள் என்னிடம் வந்து தன்னுவைப் பிடுங்கிக்கொண்டு உயிரை மாய்த்துக்கொண்டாள் உடனே பழிக்குப்பழி வாங்கும்பொருட்டு மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் உத்திரவின்பேரில் இப்பாண்டியனுக்குப் புத்திரியாக சிலம்போடு பிறந்ததால் என்னை ஆகாதென ஆற்றில் விட்டுவிட்டான் காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள மாநாய்க்கன் செட்டி என்பவன் என்னை எடுத்து வளர்த்துவந்தான் அந்த வாணியனானவன் கோவிலனாகவும் வாணிச்சியானவள் மாதவியென்ற தாசியாகவும்பிறந்து வளர்ந்தனர் என்பொருட்டு மாண்ட வாணியனுக்கு யான்மனைவியாகி என்னெண்ணப்படி பழிக்குப்பழிவாங்கிவிட்டேன் இனிமே லினகரைப் பரிபாலிக்கவரும் குலசேகர பாண்டியன் மநு முறை தவரமாட்டானவனாதலால் இனி இந்நகர் நீர்வளம் நில வளம் பெருகி பொன்னகர் தேவர்யாவரும் புகழ்ந்தேத்த சுப மங்களமாக வாழ்க்கடவது நான் என் ஸ்தானம் செல்கின்றேன். [காளிகாதேவியாக பிரசன்னமாகின்றாள்.]

குடிகள் எல்லோரும் தோத்திரம் செய்கின்றனர்.

காளிகாதேவி துதி.

ஜோர் ஜோர் என்ற இந்துஸ்தான் வர்ண மெட்டு.

இராகம் இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி

ஆதாரம் வேறில்லை நின்
அம்பொன் னேர்பதந்தாராய் (ஆ)

அநுபல்லவி.

மாதங்கிய வாணியே கௌ
மாரியே மனோஹரியே (ஆ)

சரணம்

மாருபுராதனி யோகவராதனி
மாக்ஷிசேர் கல்யாணி நீயே
மகிழ்வுடன்றெரிசன மெனக்கருள். (ஆ)

சுந்தரர்பாரியே துட்டர் சம்மாரியே
சூலியேக பாலியே யென்
துபரகலவே கிருபை செய்குவாய். (ஆ)

மதுரை மாநகரமிக்க மேம்பாடுடன் செழிப்புற்று
வளர்ந்தோங்கி வருகின்றது.

மங்களம்.

இராகம் - மோகனம் - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

எங்குணும் நிறைந்திலங்கும் ஐங்கரற்குமங்களம்
பங்கஜமலரில்மேவு பாரதிக்குமங்களம்
ஆனையையுரித்தணிந்த அத்தனுக்குமங்களம்
அங்கயற்கண்ணம்மை மீனாக்ஷிக்குமங்களம்
கலியுகத்துமெய்யனை கந்தனுக்குமங்களம்
கருதுவோர்க்கருள்செயு முகுந்தனுக்குமங்களம்
குறைவிலாதரசுசெய்யும் கோவலர்க்குமங்களம்
குணமிகுந்த கோபாலகிருஷ்ணக் கோமானுக்கு மங்களம்
முத்தமிழைக்கற்றுணர்ந்த உத்தமர்க்கு மங்களம்
சத்தியைத்தொழுமுடையார் தாமருக்கு மங்களம்

சுபம் சுபம், சுபமங்களம்.

கோவிலன் சரித்திரம்

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ ராமஜெயம்.



கன்னிர்சமீன் சரபம் மகா-ள-ள-ஸ்ரீ உடுமலை
முத்துச்சாமிக்கவிராயரவர்களியற்றிய

நவீன நாடக ராமாயண மென்னும்

இராம நாடகம்.

நம்மாழ்வார் துதி.

எழுசீர்க்கழி நெடிலடிச் சந்த விருத்தம்.

தளிமநற்பத மலர்பெயர்த்தொரு சனகிபிற்றொடர் காணக
வெளிநடத்திப ரகுகுலக்கதை விவரமுற்றிய நாடகங்
களிமனப்படி நவிலவுய்த்தநள் கனிசுவைத்தமிழ் வேதநூல்
புளிநிழற்கிடை தருசரித்திர புனிதமெய்ச்சட கோபனே.

இராகம் - நாட்டை - தாளம் - ஏகம்.

பல்லவி.

சடகோபா முதலொரு
தம்பமாகு நின்பொ ஞைபதமலர் (க)

அநுபல்லவி.

வடவேங்க டகே
வர்க்கநாற்றெட் டெப்பதிக்குங்கெதயிந் (உ)

சரணம்.

வேதநூலைத் தமிழ்மொழி
விந்தைகாண மைந்தர் பேணத்தந்தனை (சட)
சீதாராமா சரிதந்
தித்திப்பாக முத்துச் சாமிக்கருள்புரி (சட)

விநாயகர் துதி.

இராகம் - நாட்டை - தாளம் - ரூபகம்.

பல்லவி.

விதரண கண பதிததி வருவாய் நம்பினேனுன்றன்
பதமலர்நிதி கதியது தருவாய் (வித)

அநுபல்லவி.

மதுரபக்ஷண வகையனந்தம்
வைத்துப்படைத்து வாழ்த்தி வாழ்த்தித்
துதிசொல்லித்தலை தாழ்த்தித் தாழ்த்திச்
சூடுமணல்மெழு கென மனமுடை
அடியவரிடம் வாவென்னதடை (வித)

சரணம்.

தும்பிக்கையா லொருத்தி தன்னைத்
தூக்கிக் கைலை யிருத்தி
நம்பிக்கை தந்த சித்தி யிந்த
நானிலஞ் சொல்லு நத்தி
நாகப்பதி யிறைபெறுமொரு சோலைக்கும்-புனல்
காகந்துருவொடு தரவரு லீலைக்கும்-மறை
நாலுக்கும் பொருளெனவதன்
மேலுக்கும் பிரணவமெனும்
நிலைச்சிந் துரவதனசு
சீலத்தைதங் கரசிவசுத
நானுவித நீபுரியாடலுக்கும் சாக்ஷிபலபல
தானேதுவராலயநாடலுக்குமெண்ணமற்றிருந்த

நாயக யேன் செந்தமிழா நம்பதமே பாட
நீயுதவு பண்பதனை [illegible]
நாடகசம் பந்தமிதே [illegible]
ஞாயகமான் [illegible]ம்பெறுவே [illegible]

நாட்டாமதமே [illegible]
யாட்டாதிதமே [illegible]
கூட்டாயுதமே [illegible]
ஓட்டாவிதமே [illegible]

நாமத்தியல் பெறமுழக்கு சாமிக்கவிபுனைவன்று
நீமற்றிணையுறு சித்து நேமப்படி கொசித்து
நலம்பெறங்க . வலக்கநகமுடன்
இளம்பிறைமுடி (துலங்கிடவினி (வி

கலைவாணி துதி.

இராகம் - கமாஸ் - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

1. கீதஞான போத கல் தும் வேதவாணிபாதமே
ஓதஓதப் பூதலத்தின் மீதுண்டோ பிரமாதமே

2. [illegible]க்குமே
திக்குணத்தைப் போக்கிநல்ல பாக்யமும் உண்டாக்குமே

3. [illegible]

[illegible] புத்தகத்தில் பார்க்கவும்.

புதிய பாடல்கள்! புதிய பாடல்க

தமிழ்நாடெங்கும் புகழ்பெற்ற

கன்னிச் சமீன் சரபம் உடுமலை

மூத்துச்சாமிக் கவிராயரவர்கள்

இயற்றிய பக்திரஸக்கீர்த்தனங்கள்

இப்போதுதான் புதிதாய்வெளியாயிற்று.

இப்பூவுலகின் கண் தற்காலம் நடத்திவரும் டிராமாக் கம்பெ ரும் பலபக்த சிரோமணிகளும் விரும்பிய வண்ணம் இந்துஸ்தான் ப கஜல், டோமரீ, தில்லானா, ...ப்பா, திருப்புகழ், வண்ணம் முதலி பல அற்புத வர்ணமெட்டுகளுடன் டிராமா பாணியாக சாதுரிய மா சரபம் மகா-ள-ள-ஸ்ரீ, முத்துசாமி கவிராயரவர்களால் பேரின்ப காக இயற்றிய பாடல்களை ஒருக்கே சேர்த்து அச்சிட்டுத் தரவே மென்று சமஸ் நேயர்களெவரும் நெடுநாளாக கேட்டுக்கொண்டதின் மிக்க பிரயாசையோடு புதிதாக அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின் இதில் அமைந்துள்ள வர்ணமெட்டுகளின் இனிமையும் பாடலின் மையும் வாக்கின் அருமையும் நவரசபூர்த்தியாகவே யிருக்கும், நாடெங்கும் பாடும் பாடல்களில் முதன்மையுற்றதும் மகிமை பெற் இதுதான் இதுதான். என்பதும் புஸ்தகத்தை வாங்கி வாசிக்கும் ளுக்கே நன்கு விளங்கும். சொற்பகாப்பிகளே தயாரிலிருக்கிறது மு வர்களுக்கன்றி பிந்தினவர்களுக்ககப்படுவதரிது. விலை அணு

மேற்படியா ரவர்களியற்றிய

ஐந்தாம் ஜார்ஜ் மகாராஜா அவர்கள் முடிசூட்டு தர்பார் கீதங்கள்.

நூதன பார்ஸி டான்ஸ் வர்ணமெட்டுகளாலமைந்தது புதிய கள். இதின் விலை அணு-1.

ஸ்ரீமான் உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்கள்

"இராம நாடகம்"

கூடிய சீக்கிரத்தில் வெளிவரும். சொற்பகாப்பிகளே ரிப்பதால் வேண்டுவோர் முன்னமாகவே விலாசத்தை தெ கொள்ளவும்.

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்

புக்ஸெல்லர் ரப்பர் ஸ்டாம்பு மேக்கர்

புதுமண்டபம் மதுரை.

iyār,

ai